செ.வெ.எண்: 25/ஜுலை நாள்: 12.07.2018

# பத்திரிக்கை செய்தி

**மான்ய விலையில் தோட்டக்கலைப் பயிர்களை சாகுபடி செய்ய விவசாயிகளுக்கு வாய்ப்பு என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

1. குறைந்த நீரில் விவசாயிகள் அதிக வருவாய் ஈட்டக்கூடிய காய்கறிகள், பழப்பயிர்கள், மலர் பயிர்கள், சுவை தானிய பயிர்கள் மற்றும் மலைத் தோட்டப் பயிர்கள் ஆகியவற்றை சாகுபடி மேற்கொள்ள விரும்பும் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தின் மூலம் 40% அல்லது 50% மானயத்தில் அதிக பட்சமாக ஒரு பயனாளிக்கு 4 எக்டருக்கு மான்ய உதவிகள் வழங்கப்படுவதோடு உயர் சாகுபடி தொழில் நுட்பங்கள் திட்ட விரிவாக்க அலுவலர்கள் மூலம் வழங்கப்படுகிறது.
2. இத்திட்டத்தில் காய்கறி பயிர்கள்சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு வீரிய ஒட்டு ரக விதைகள் அல்லது குழித்தட்டு நாற்றுகள் மற்றும் இதர இடுபொருட்கள் எக்டருக்கு ரூ. 20,000/- மதிப்பில் வழங்கப்படுகிறது.
3. மா மற்றும் கொய்யா பயிர்களில் அடர்நடவு முறையில் சாகுபடி மேற்கொள்ள விரும்பும் விவசாயிகளுக்கு மா பயிருக்கு ரூ. 9,840/- மதிப்பீட்டிலும் கொய்யாவிற்கு ரூ. 17,599/- மதிப்பீட்டிலும் நடவுச் செடிகள் வழங்கப்படுகிறது.
4. திசு வாழை பயிர் சாகுபடிக்கு எக்டருக்கு ரூ. 37,500/- மதிப்பில் நடவுச் செடிகள் மற்றும் இடுபொருட்கள், பப்பாளி சாகுபடி மேற்கொள்ள எக்டருக்கு ரூ. 12,000/- வீதம் நடவுச் செடிகள் மற்றும் இதர இடுபொருட்கள்.
5. மஞ்சள் சுவை தான்யப் பயிர்கள் சாகுபடி மேற்கொள்ள எக்டருக்கு ரூ. 12,000/- வீதம் நடவுச் செடிகள் மற்றும் இதர இடுபொருட்கள்.
6. ரோஜா, மல்லி மற்றும் சாமந்தி போன்ற உதிரி மலர்கள் சாகுபடி செய்ய எக்டருக்கு ரூ.16,000/-வீதம் நடவுச் செடிகள்.
7. சம்பங்கி, கிளாடியோலஸ் போன்ற கிழங்கு வகை மலர்களுக்கு ரூ. 60,000/- வீதம் மான்யம்.

விவசாய பெருமக்கள் தங்களுக்கு தேவையான விதைகள், நடவுச் செடிகளின் விவரங்களை ”உழவன் செயலி” மூலம் அறிந்து இச்செயலி மூலம் பதிவு செய்யும் விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் திட்ட பயன்கள் வழங்கப்படுகிறது.

இது தவிர விவசாயிகள் திட்டங்கள் தொடர்பாக தேவைப்படும் விபரங்களை தங்களது வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள தோட்டக்கலைத்துறை அலுவலர்களை (தொலைபேசி எண்) அணுகி பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| தருமபுரி | - 04342 - 264266 |
| நல்லம்பள்ளி | - 04342 - 244244 |
| பென்னாகரம் | - 04342 - 254754 |
| காரிமங்கலம் | - 04348 - 241788 |
| பாலக்கோடு | - 04348 - 254754 |
| மொரப்பூர் | - 04346 - 263339 |
| அரூர் | - 04346 - 221122 |
| பாப்பிரெட்டிப்பட்டி | - 04346 - 246144 |

கூடுதல் தகவலுக்கு மாவட்ட தோடட்டக்கலைத்துறை துணை இயக்குநரை தொடர்பு கொள்ளலாம். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிக்காட்டுதலினபடி இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. விவசாயிகள் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**